
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1084

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

98

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# பேதங்களை ஒழிக்கும் படை!

மதுரையில், கருஞ்சட்டைப் படையின் முதல் மாநில மாநாடு நடைபெறுவதற்கு முன்பாக, 06.04.1946-இல் அன்றைய தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியில், மாவட்ட கருப்புச்சட்டை மாநாடு நடைபெற்றது. காலை 8 மணிக்கு பெரியாரும் அன்னை மணியம்மையாரும் குறிஞ்சிப்பாடிக்கு ரயில் மூலம் வந்தடைந்தனர். பெரியார் வந்திறங்கியதும் அணிவகுத்து நின்ற 1,500-க்கும் மேற்பட்ட கருஞ்சட்டை வீரர்கள், ‘பெரியார் வாழ்க... வாழ்க’ என முழக்கம் எழுப்பினர். குறிஞ்சிப்பாடியின் அன்றைய சேர்மனாக இருந்த பி.பி.முத்தையா, இரா.சரவணன், கே.டி.பி.பழனியப்பன் ஆகியோர் பெரியாருக்கு மாலை சூட்டி, காரில் ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

பெரியார் முதன்முதலாக அப்பகுதிக்குச் சென்றதால், சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து, அவரைப் பார்க்க வழியெங்கும் கூடியிருந்த மக்களின் எண்ணிக்கை 6,000-ஐ தாண்டும். மக்கள் வெள்ளத்தில் ஊர்ந்தவாறு ‘தாளமுத்து நடராசன்’ பந்தலை பேரணி அடைந்தது. செயராமன் இசை நிகழ்ச்சியுடன் மாநாடு தொடங்கியது. மதியழகன் கொடியேற்றி வைக்க, பேராசிரியர் அன்பழகன் மாநாட்டைத் திறந்துவைத்தார். இரா.சரவணன் வரவேற்புரை ஆற்றினார். அவருடைய 5 வயது மகன் திராவிடமணி, 301 காலணா அடங்கிய பணமுடிப்பை பெரியாருக்கு வழங்கி, மாலை அணிவித்தார்.

மாநாட்டுக்குத் தலைமை ஏற்ற பெரியார், கூட்டத்தாரின் பலத்த கரவொலிக்கு இடையே, சுமார் இரண்டரை மணி நேரம் உரையாற்றினார். பின்னர், கருப்புச்சட்டை படையின் அவசியம் குறித்து ஏ.பி.சனார்த்தனம் பேசினார். அதன் பின்னர், மதிய உணவுக்காக மாநாடு கலைந்தது. சேர்மன் ஏ.பி.முனுசாமி இல்லத்தில் பெரியார் உள்ளிட்ட முக்கிய விருந்தினர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது.

மீண்டும் மாலையில் மாநாடு கூடியவுடன், பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, மதம்-சாதிகளின் பேரால் திராவிடர்களுக்கு இருந்துவரும் பேதங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும், தேநீர் - காபி கடைகள், விடுதிகள் முதலியவற்றில் நிலவிவரும் பேதங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும், இவற்றை முதல் போராட்டமாகக் கொண்டு கருப்புச்சட்டை படையை சர்வ சுதந்திரத்துடன் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்றும் பெரியாருக்கு வேண்டுகோள் விடுத்து, தீர்மானங்கள் இயற்றப்பட்டன. அதே போல பல்கலைக்கழகங்களில் திராவிடர்களின் தனிக்கலை, இலக்கியம் முதலியனவற்றை அங்கீகரிக்க வேண்டும் என்றும் தீர்மானம் இயற்றப்பட்டது.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குப் போதிய நூல் இருப்பை உறுதி செய்ய வேண்டும், குறிஞ்சிப்பாடி தொடக்கப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும், தபால்-தந்தி வசதியை அதிகரிக்க வேண்டும், சாலை-விளக்கு வசதிகளை அதிகரிக்க வேண்டுமென்று குறிஞ்சிப்பாடி ஊராட்சி நிர்வாகத்தை வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர், இரெ.இளம்வழுதி திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைத்தார். பன்னீர்செல்வம் படத்தை ஏ.பி.சனார்த்தனம் திறந்துவைத்தார். அதன்பின்னர், கருப்புச்சட்டை படையின் அவசியம், பணிகள் குறித்து நீண்டநேரம் பேசிய பெரியார், மாலை 6.30 மணிக்கு சென்னை புறப்பட்டார்.

அதன்பிறகு, ஏ.பி.முனுசாமி தலைமையில் திறந்தவெளியில் கூட்டம் கூடியது. பேராசிரியர் அன்பழகன், அப்துல் வகாப், ஆசிரியர் கி.வீரமணி ஆகியோர் உரையாற்றினர். ‘சேரன் செங்குட்டுவன்’ நாடகம், ‘தெனாலி ராமன்’ நகைச்சுவை கதை நாடகங்களுடன் மாநாடு முடிவுற்றது. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடியது, கருப்புச்சட்டைப் படையின் வலிமையைக் கூட்டியது.

**...கூட்டம் திரளும்**

## விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவரா பெரியார்?




பெரியார் மீதான விமர்சனங்களுக்கும், அவதூறுகளுக்கும் பதிலுரைக்கும் வகையில், திராவிடர் கழக மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் கோ.தளபதிராஜ் எழுதிய நூல் ‘விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவரா பெரியார்?’. பெரியார் மீது வைக்கப்படும் பல்வேறு விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில், எழுதப்பட்ட இந்த நூலை ‘திராவிடன் குரல்’ பதிப்பகம் வெளியிட்டிருந்தது.

பெரியார் மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தவிடுபொடியாக்க, அவரது எழுத்தை, பேச்சை, வரலாற்றுப் பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்து, ஐந்து பதிப்புகளைக் கண்டது இந்த நூல். குறிப்பாக, இஸ்லாமியர்களுக்கு எதிரானவரா பெரியார்?

பொதுவுடைமைக் கொள்கையைக் கைவிட்டாரா பெரியார்?

சாதி மாநாடுகளில் பெரியார் பங்கேற்றது முரணா?

தாழ்த்தப்பட்டோர் ரவிக்கை அணிவதை விமர்சித்தாரா பெரியார்?

தமிழைக் கொச்சைப்படுத்தினாரா பெரியார்? எனப் பல கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறது இந்த நூல்.

ரூ.320க்கு வெளிவந்த இந்த நூலை, காலத்தின் தேவை கருதி, சீர் வாசகர் வட்டம் தற்போது ரூ.100 விலையில் தரமான பதிப்பாக வெளியிட்டுள்ளது. சென்னை புத்தகக் கண்காட்சியில் சீர் வாசகர் வட்ட அரங்கு - F49 - இல் கிடைக்கும்.

## ஃப்ளாஷ்பேக்



### கழகத் தலைவருடன் சிறையில்...



2004-ஆம் ஆண்டு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்தார், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள். அப்போது, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளராக இருந்த நான், மேல்மலை அருகே ஒரு தேநீர்க் கடையில் அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. பூம்பாறையில் நடைபெற்ற, இளைஞர் அணி நிகழ்ச்சியில் அன்றைய திண்டுக்கல் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் ஐ.பெரியசாமி, ஒருங்கிணைந்த தேனி மாவட்டச் செயலாளர் அண்ணன் எல்.மூக்கையா ஆகியோருடன் நானும் மேடையில் இடம்பெற்றேன். கழகத்துக்காகப் பல போராட்டங்களில் சிறை சென்றிருந்தாலும், 2001-இல் தலைவர் கலைஞர் கைதை கண்டித்து, இன்றைய கழகத் தலைவர் கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டபோது, அவரது கைதைக் கண்டித்து, நாங்களும் அதே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டது மனதை விட்டு நீங்காது. அதே உணர்வுடன் இன்றைக்கும் பணியாற்றி வருகிறேன்.



கே.வி.எம்.ஜீவா

**- கே.வி.எம்.ஜீவா, மாநிலத் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர், திண்டுக்கல் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


98

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# தீப அரசியலுக்குப் பின்னால்...

ஆதிக்கவாதிகளின் அடிப்படை குணம் அமைதியைக் குலைப்பதுதான். அந்த வகையில், இந்தியா முழுவதும் மதவெறி கொண்டு மானுட நேயத்தைச் சிதைத்துக் கொண்டிருக்கும் பாரதிய ஜனதா கட்சி, தமிழ்நாட்டில் குறிவைத்திருப்பது, திருப்பரங்குன்றம் சிக்கந்தர் தர்கா. அதற்கு நீதிமன்றமும் துணை நிற்கிறது. தீர்ப்புக்கும் நீதிக்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு என்பதைத்தான் திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தீர்ப்புகள் உறுதிசெய்கின்றன.

‘திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற தமிழ்நாடு அரசு அனுமதி மறுக்கிறது’ என்ற ஒற்றை வரியை, அனைத்து தரப்பு மக்களின் மனங்களிலும் பதிய வைக்கும் வஞ்சகத்தை நிகழ்த்த துடித்துக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், அந்த மலையையும் அதைச் சுற்றி நிற்கும் முழு அரசியலையும் அறிந்து கொள்வது அவசியமாகிறது. அதற்கேற்ப, திருப்பரங்குன்றம் மலையை, பூகோளரீதியிலும் தொல்லியல் ஆய்வுகளின் அடிப்படையிலும், சங்க காலம் முதல் அங்கு நிலவிய வரலாற்றின் துணையுடனும், அங்கு நிலவி வரும் இறையியல் போக்குகளையும் உரிய சான்றுகளுடன் விளக்குகிறது, எழுத்தாளர் சூர்யா சேவியர் எழுதி, பாரதி புத்தகாலயம் வெளியிட்டிருக்கும் ‘திருப்பரங்குன்றம்- முழு வரலாற்று ஆய்வு’ நூல்.




13 அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டிருக்கும் இந்நூலில் - மலையின் தோற்றம், அங்கு மனிதர்களின் நடமாட்டம் தொடங்கிய காலம், அப்பகுதி அமைந்திருக்கும் இடம், மதுரையில் கடையேழு வள்ளல்கள் முதல் திராவிட இயக்கம் வரை செலுத்திய தாக்கம், அதன் அரசியல் வரலாறு ஆகியவை குறித்து நமக்கு தெளிவுபடுத்துகிறது.

ஓர் அத்தியாயம், அங்கு நிலவிய வழிபாடுகளின் வரலாறுகளைச் சொல்கிறது. இயற்கை வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு, கொற்றவை வழிபாடு, வேல் வழிபாடு, முருகன் வழிபாடு, நடுகல் வழிபாடு, பௌத்த-சமண சமயங்களின் வருகை, பக்தி இயக்கத்தின் செல்வாக்கு என மிக நீண்ட வழிபாட்டு மரபை சுருக்கமாகத் தெரிவிக்கிறது.

இதைத் தொடர்ந்து, தர்காக்கள் உருவான பின்னணியுடன் சிக்கந்தர் தர்கா அங்கு எந்தக் காலத்தில் தோன்றியது என்பதையும், அங்கு ஆண்டுதோறும் நடைபெறும் சந்தனக் கூடு ஊர்வலத்துக்குப் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த மக்கள் பரம்பரை பரம்பரையாக மேற்கொண்டுவரும் பணிகளையும் இதில் கவனப்படுத்துகிறார் நூல் ஆசிரியர்.

மேலும், பக்தி மரபில் சிவன் ஆலயங்களில் மட்டும் கடைப்பிடிக்கப்படும் கார்த்திகை தீபம் ஏற்றும் நடைமுறை, முருகன் கோயில்களில் இல்லை என்றும் திருச்செந்தூர், பழனி, பழமுதிர்சோலை, மருதமலை, திருத்தணி ஆகிய முருகன் கோயில்களில் ஏன் கார்த்திகை தீபம் ஏற்றப்படுவதில்லை என்ற கேள்வியையும் இந்நூல் எழுப்புகிறது.

இந்து சமய அறநிலையத்துறை - சனாதனம் - மதவாதம் ஆகியவற்றின் சுருக்கமான வரலாற்றுப் பின்னணியுடன் திருப்பரங்குன்றத்தில் மதவாத சக்திகள் நிகழ்த்த துடிக்கும் அரசியலை மிகத் துல்லியமாக நமக்கு எடுத்துரைக்கிறார்.

சனாதன இந்து மத வெறியர்கள், சாமானியர்களின் சமய வழிபாடுகளில் தலையிடுவதால் ஏற்படும் பாதகங்களை இந்நூல் கவனப்படுத்தும் அதே வேளையில், பாசிசத்துக்கு எதிராக மானுட நேயத்தைப் பேண வேண்டுமென வலியுறுத்துகிறது. திருப்பரங்குன்றம் குறித்த, 360 கோண பார்வையை வழங்கும் இந்நூலை, தமிழ்நாட்டில் மதவாத அரசியலை அப்புறப்படுத்த நினைக்கும் அனைவரும் வாசிக்க வேண்டும்.

**...வாசிப்போம்.**

## கருவூலம்

### 1958-இல் நாடாளுமன்றத்தில் குரல்!

1958-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில், தி.மு.கழகத்தின் சார்பில் இடம்பெற்ற ஈ.வெ.கி.சம்பத்தும் இரா.தர்மலிங்கமும், அந்த ஆண்டு நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையாற்றியதற்கு நன்றி தெரிவித்துப் பேசுகிறபோது, வெகுமுக்கியத்துவம் வாய்ந்த 16 திருத்தங்களை முன்வைத்தனர். மொழிப் பிரச்சினையும் இலங்கை - பர்மா தமிழர்களின் பிரச்சினைக்குக் குரல் கொடுத்ததும், அதில் முக்கியமானவை.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131